திட்டவட்டமான செயல்தந்திரத்தைப் பின்பற்றிவருகிறது. ‘‘எங்கேயும் ஒரு சிறிய சபைக் கட்டிடத்தைக் கூடக் கட்டுவதற்கு நாங்கள் விரும்ப வில்லை. இது சுவிசேஷம் மிக வேகமாகப் பரவுவதற்கு வழிவகுக்கிறது, அதிகாரத்திலுள்ளவர்கள் எங்களைக் கண்டுபிடிப்பதும் கடினமாக இருக் கிறது, எங்கள் ஆதாரங்கள் முழுவதையும் நேரடியாகச் சுவிசேஷ ஊழியத்துக்காகச் செலவிடும்படி இது எங்களைப் பலப்படுத்துகிறது’’ என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.



# 5

# சபை வளர்ச்சி

நீங்கள் ஒரு போதகர், உங்கள் சபை வளர்ச்சிபெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். இது போதகர்களின் நடுவே பொதுவாகக் காணப்படும் வாஞ்சையாக இருக்கிறது. ஆனால் ஏன் உங்கள் சபை வளர்ச்சிபெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்? *உங்கள் இருதயத்திலுள்ள நேர்மையான காரணம் எது?*

நீங்கள் வெற்றிபெற்றவர் என்பதுபோல உணர வேண்டும் என்பதற்காக உங்கள் சபை வளர வேண்டுமென்று விரும்புகிறீர்களா? நீங்கள் மதிக்கப்படும் ஒருவராகவும், செல்வாக்குள்ள ஒருவராகவும் இருக்க விரும்புகிறீர்களா? மக்கள்மீது அதிகாரத்தைக் காட்ட நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் செல்வத்தைப் பெறும்படி நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? உங்கள் சபை வளர வேண்டும் என்று விரும்பு வதற்கு இவையெல்லாம் தவறான காரணங்களாகும்.

இன்னுமதிகமான மக்கள் பரிசுத்த ஆவியானவரால் மாற்றப்படு வதின்மூலம் தேவன் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக உங்கள் சபை வளர வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களானால், இது சபை வளர்ச்சியை விரும்புவதற்கான சரியான காரணமாகும்.

நமது செயல்நோக்கங்கள் சுயநலமாக இருக்கும் வேளையில், அவை தூய்மையானவை என்று நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியும்.

நமது மெய்யான செயல்நோக்கங்களை நாம் எப்படி அறிய முடியும்? நாம் மெய்யாகவே *தேவனுடைய* ராஜ்யத்தைக் கட்ட விரும்பு கிறோமா அல்லது நம்முடைய *சொந்த* ராஜ்யத்தைக் கட்ட விரும்பு கிறோமா என்பதை அறிவது எப்படி?

மற்றப் போதகர்களின் வெற்றியைக் குறித்து நாம் உள்ளுக்குள் எத்தகைய எண்ணம் கொண்டிருக்கிறோம் என்பதை அளந்து பார்ப்பது ஒரு வழியாகும். நமது செயல்நோக்கங்கள் தூய்மையானவை என்று நாம்

நினைத்தாலும், நாம் உண்மையாகவே தேவனுடைய ராஜ்யமும் *அவருடைய* சபையும் வளர்ச்சிபெற வேண்டும் என்று விரும்பினாலும், மற்றவர்களின் சபை வளர்ச்சியைக் குறித்துக் கேள்விப்படும்போது, நமது இருதயத்தில் பொறாமைப்படுவதைக் காண்போமானால், அது நமது செயல்நோக்கங்கள் தூய்மையானவை அல்ல என்பதை வெளிப்படுத்து கிறது. நாம் சபை வளர்ச்சியில் அல்ல, நமது *சொந்த* சபை வளர்ச்சி யிலேயே அதிக ஆர்வம் கொண்டிருக்கிறோம் என்பதை அது காட்டு கிறது. ஏன் அப்படி? ஏனென்றால் நமது செயல் நோக்கங்கள் ஓரளவு சுயநலத்தைக் கொண்டிருக்கின்றன.

நமது பகுதியில் ஒரு புதிய சபை துவங்கப்பட்டிருப்பதைக் குறித்து அறியும்போது நாம் எவைகளை நினைக்கிறோம் என்பதும் நமது உள்ளான செயல்நோக்கங்களை வெளிப்படுத்துகிறது. நாம் அச்சுறுத்தப் படுவதாக உணருவோமானால், தேவனுடைய ராஜ்யத்தைவிட நமது சொந்த ராஜ்யத்தைக் குறித்தே அதிக அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதை அது காட்டுகிறது.

பெரிய அல்லது வளரும் சபைகளின் போதகர்களும்கூட இதே போன்று தங்கள் செயல்நோக்கங்களைச் சோதித்துப் பார்க்கலாம். ‘‘எனது சபை சிறியதானாலும் பரவாயில்லை என்று புதிய சபைகளை ஸ்தாபிக்கும்படி நான் முக்கிய தலைவர்களையும் மக்களையும் அதற்காக விட்டுக்கொடுப்பேனா?’’ என்ற கேள்வியை அவர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட கருத்தை அதிகமாக எதிர்க்கும் ஒரு போதகர் தனது சொந்த மகிமைக்காகவே தனது சபையைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கலாம். [இதைப் போலவே ஒரு பெரிய சபையின் போதகரும் தனது சொந்த மகிமைக் காகப் புதிய சபைகளை ஸ்தாபிக்க முடியும், தனது சபையிலிருந்து எத்தனை சபைகள் பிறந்திருக்கின்றன என்று பெருமையடித்துக் கொள்ளும்படி அவர் இப்படிச் செய்யலாம்]. ‘‘நான் சிறிய சபைகளின் போதகர்களோடு தொடர்புகொண்டிருக்கிறேனா? அல்லது நான் மேலான வகுப்பில் இருப்பதாக நினைத்துக்கொண்டு, அவர்களை விட்டு விலகியிருக்கிறேனா?’’ அல்லது ‘‘ஒரு வீட்டுச் சபையில் பத்து அல்லது பன்னிரண்டு பேருக்கு ஊழியம்செய்ய எனக்குச் சம்மதமா? அல்லது அது எனது பெருமைக்கு இழுக்காகுமா?’’[20] என்ற கேள்வியையும் போதகர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்ளலாம்.

[20] இது வீட்டுச் சபை மாதிரியின் மற்றொரு அநுகூலமாகும் – வீட்டின் அளவைப்போலவே சபையின் அளவும் சிறியதாக இருக்கிறபடியால், போதகர்கள் தவறான காரணங்களுக்காகப் பெரிய சபைகளைப் பெற வேண்டும் என்று முயல முடியாது.





## சபை வளர்ச்சி இயக்கம்

அமெரிக்காவிலும் கனடாவிலுமுள்ள கிறிஸ்தவ புத்தகக் கடை களில் பெரும்பாலும் சபை வளர்ச்சி குறித்த நூல்களுக்கு ஒரு தனிப் பகுதியே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகங்களும் அவைகளிலுள்ள கருத்துக்களும் உலகமெங்கும் பரவியுள்ளன. தங்கள் சபையில் வருகையை அதிகரிப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளப் போதகர் கள் அதிக ஆவலோடு இருக்கிறார்கள். இவர்கள் அமெரிக்க மெகா சபைப் போதகர்களின் ஆலோசனைகளுக்குச் செவிகொடுக்கிறார்கள். இவர்கள் தங்கள் சபைக் கட்டிடத்தின் அளவு, ஞாயிறு காலை ஆராதனைக்கு வருபவர்களின் எண்ணிக்கை இவைகளைக்கொண்டு வெற்றிகரமானவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

என்றாலும், பகுத்தறிவோடு சிந்திக்கும் சிலர், சீஷராக்குவதின் தரத்தைச் சுட்டிக்காட்டுவதற்குச் சபைக்கட்டிடத்தின் அளவோ அல்லது வருகை தருபவர்களின் எண்ணிக்கையோ அவசியமில்லை என்பதை உணர்ந்திருக்கிறார்கள். சில அமெரிக்கச் சபைகள் வேதாகம சத்தியத்துக்கு முரண்பாடான, கவர்ந்திழுக்கும் கோட்பாடுகளின் மூலமாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. பெரும்பாலான அமெரிக்கப் போதகர்கள், ஒருவர் இரட்சிக்கப்பட்டுவிட்டால், அவர் எப்படித் தனது வாழ்க்கையை வாழ்ந்தாலும், எதை விசுவாசித்தாலும் தனது இரட்சிப்பை இழந்துபோவதில்லை என்று நம்புகிறார்கள், அதை அறிவிக்கிறார்கள் என்று நான் உலகெங்கிலுமுள்ள போதகர்களிடம் கூறியபோது அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். இதைப்போலவே பல அமெரிக்கப் போதகர்கள் நீர்த்துப்போன சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள், பரிசுத்தமில்லாமல் தங்களால் பரலோகத்துக்குச் செல்ல முடியும் என்ற எண்ணத்தை மக்களுக்குக் கொடுக்கிறார்கள். சிலர் செழிப்பைக் குறித்த சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். மக்களின் பேராசையைத் தூண்டி விட்டு, அவர்கள் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்குமாறு செய்கிறார்கள். இப்படிப்பட்ட போதர்களின் சபை வளர்ச்சி குறித்த யுக்திகளை நாம் நிச்சயமாகப் பின்பற்றக் கூடாது.

சபை வளர்ச்சி குறித்து நானும் பல நூல்களை வாசித்திருக் கிறேன். இவைகளைக் குறித்த எனது உணர்வுகள் கலவையாக இருக்கின்றன. பல நூல்கள் ஓரளவு வேதாகமரீதியான செயல்தந்திரங்க ளையும், ஆலோசனைகளையும் கொண்டிருக்கின்றன. ஆனால் கிட்டத்தட்ட எல்லா நூல்களுமே 1700 ஆண்டுகாலப் பழமையான அமைப்புச் சார்ந்த சபை மாதிரியைக் குறித்தே சொல்லுகின்றன, வேதாகமரீதியான சபை மாதிரியைக் குறித்துச் சொல்லவில்லை. சீஷர்களையும், சீஷர்களை உருவாக்குபவர்களையும் பெருகச் செய்து கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவதின்மீது பார்வை வைக்கப்பட வில்லை. தனிப்பட்ட அமைப்புச்சார்ந்த சபைகளைக் கட்டியெழுப்பு

வதைக் குறித்தே அவை குறிப்பிடுகின்றன. இதனால் பெரிய கட்டிடங்கள் தேவைப்படுகின்றன, சிறப்பான பயிற்சிபெற்ற சபை அலுவலர்கள் தேவைப்படுகிறார்கள், செயல்திட்டங்கள் தேவைப்படுகின்றன. இதன் வடிவமைப்பு ஒரு குடும்பத்தைப்போல இருப்பதற்கு மாறாக ஒரு தொழில்ரீதியான நிறுவனம்போல இருக்கிறது.

கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பாத மக்களையும் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் சபை ஆராதனைகள் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்று சில நவீன சபை வளர்ச்சி குறித்த செயல்தந்திரங்கள் சொல்லுகின்றன; உறுப்பினர்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பது மட்டுமே இதன் நோக்கமாகும். சிறிய, ஆக்கபூர்வமான பிரசங்கம், அதிகமாக உணர்வுகளை வெளிப்படுத்தாத ஆராதனை, அதிகமான சமுதாய நடவடிக்கைகள், பணத்தைக் குறித்துக் குறிப்பிடக் கூடாது போன்றவைகளை அவர்கள் செயல்தந்திரங்களாகக் குறிப்பிடுகிறார்கள். இது தன்னைத்தான் வெறுத்து, கிறிஸ்துவின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியக்கூடிய சீஷர்களை உருவாக்குவதில்லை. உலகத்தைவிட்டு வேறுபடுத்திக் காண முடியாத, ஆனால் கிறிஸ்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்களையே இவர்களால் உருவாக்க முடிகிறது, இவர்கள் நரகத்துக்குச் செல்லும் விசாலமான பாதையில் சென்றுகொண்டிருப்பவர்களாவர். இது உலகத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளும் தேவனுடைய செயல்தந்திரம் அல்ல, சபையை ஆதாயப்படுத்திக்கொள்ளும் சாத்தானின் செயல்தந்திரமாகும். இது ‘‘சபை வளர்ச்சி’’ அல்ல, ‘‘உலக வளர்ச்சியாகும்.’’

### தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரி

மிகவும் பிரபலமாக இருக்கும் அமெரிக்க சபை வளர்ச்சி செயல்தந்திரம் ‘‘தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரி’’ என்று அழைக்கப்படுகிறது. இந்தச் செயல்தந்திரத்தின்படி ஞாயிறு காலை ஆராதனைகள் இவைகளுக்காக வடிவமைக்கப்படுகின்றன: 1] இரட்சிக்கப்படாத நண்பர்களை அழைப்பதில் கிறிஸ்தவர்கள் சௌகரியமான உணர்வைப் பெறுகிறார்கள். 2] இரட்சிக்கப்படாத மக்கள் தங்களால் புரிந்துகொள்ளும்படி சொல்லப்படும் சுவிசேஷத்தைக் கேட்கிறார்கள். வாரநாள் ஆராதனைகளும், சிறு குழுக்களும் விசுவாசிகளைச் சீஷராக்குவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

இதன் மூலம் சில தனிப்பட்ட சபைகள் மிகப் பெரியதாக வளர்ந்திருக்கின்றன. அமைப்புச் சார்ந்த அமெரிக்க சபைகளிடையே இவை நற்செய்தி ஊழியத்துக்காகவும், மக்களைச் சீஷராக்குவதற்காகவும் அதிகமான செயல்திறனைப் பெற்றிருக்கின்றன. ஆனால் எல்லோரும் சிறு குழுக்களில் ஒன்றுபடுத்தப்பட வேண்டும் [பெரும்பாலும் இது நடப்பதில்லை]. சுவிசேஷத்தை விட்டுக்கொடுக்காமல் அவர்கள் அங்கே சீஷராக்கப்பட வேண்டும். குறைந்தபட்சமாக, தேடுபவர்களுக்கு





உணர்வுள்ள சபைகள் இரட்சிக்கப்படாத மக்களை எட்டுவதற்காகச் சில செயல்தந்திரங்களை அமுல்படுத்தியிருக்கின்றன, பெரும்பாலான அமைப்புச் சார்ந்த சபைகள் இப்படிப்பட்ட திட்டங்களைப் பெற்றிருப்பதில்லை.

தேடுபவர்களுக்கு உணர்வுள்ள அமெரிக்க மாதிரியை சபை வளர்ச்சி குறித்த வேதாகம மாதிரியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்ன தெரிகிறது?

நடபடிகளின் புத்தகத்தில், தேவனால் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் சுவிசேஷத்தைப் பொதுவாகவும், வீடு வீடாகவும் அறிவித்திருக்கிறார்கள். இவை அவிசுவாசிகளைக் கவரும் வகையில் அற்புத அடையாளங்களைக் கொண்டிருந்தன. மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தவர்கள் அப்போஸ்தலர்களின் போதனைக்குத் தங்களை அர்ப்பணித்தார்கள். வீடுகளில் ஒன்றாகக் கூடிவந்து தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொண்டார்கள், ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்தினார்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தார்கள், ஒன்றாக ஜெபித்தார்கள். இவை எல்லாமே மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகளின் மேற்பார்வையின் கீழாகச் செய்யப்பட்டன. தேவனால் அழைக்கப்பட்ட உபதேசியார்களும், தீர்க்கதரிசிகளும் ஒவ்வொரு சபையாகச் சென்று வந்தார்கள். எல்லோரும் நண்பர்களோடும், அண்டைவீட்டாரோடும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டார்கள். சபை வளர்ச்சியை மந்தமாக்கக்கூடிய வகையில் எந்தக் கட்டிடமும் கட்டப்பட வேண்டியிருக்கவில்லை. இதனால் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து சுவிசேஷத்தைப் பரப்புவதற்கும், சீஷர்களை உருவாக்குவதற்கும் தேவையான ஆதாரங்கள் கொள்ளையடிக்கப்படவில்லை. தலைவர்கள் வேதாகமப் பள்ளிகளுக்கோ அல்லது இறையியல் கல்லூரிகளுக்கோ அனுப்பப்படாமல் வேலையில் இருக்கும்போதே பயிற்சியைப் பெற்றார்கள். இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் எட்டப்படும் வரையில் சபை வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தது.

ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரியில் அற்புத அடையாளங்கள் காணப்படுவதில்லை. எனவே அது கவர்ந்திழுக்கவும், குற்றத்தை உணர்த்தவும் தெய்வீக வழிவகையைப் பெற்றிருக்கவில்லை. மக்களைச் செய்தியைக் கேட்கும்படியாக ஒரு கட்டிடத்துக்கு வரவழைப்பதற்காக விளம்பரங்களும் பிற விற்பனை யுத்திகளுமே இந்த மாதிரியில் பின்பற்றப்படுகின்றன. பிரசங்கிப்பவரின் பேச்சுத் திறன் மற்றும் நயந்து பேசுவதின்மூலமாகவே குற்றத்தைக் குறித்து உணர்த்த முடியும். இது பவுலின் செயல்முறைக்கு எவ்வளவாக வேறுபடுகிறது! அவர் இப்படி எழுதியிருக்கிறார்: ‘‘உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில்

நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது’’ [1 கொரி. 2:4–5].

## இன்னுமதிக வேறுபாடுகள்

தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரியில் அப்போஸ்தலர்களோ அல்லது சுவிசேஷகர்களோ இருப்பதில்லை, போதகரே முக்கியமான நபராக இருக்கிறார். ஒரு கேள்வி: சுவிசேஷ ஊழியத்திலிருந்து அப்போஸ்தலர்களையும், சுவிசேஷகர்களையும் அகற்றிவிட்டு, அவர்களுடைய பொறுப்பை ஒரு போதகருக்குக் கொடுப்பது சபை வளர்ச்சியைப் பெறுவதற்கான மேன்மையான வழிவகை ஆகுமா? [21]

தேடுபவர்களுக்கு உணர்வுள்ள போதகர் வாரம் ஒருமுறை ஒரு ஞாயிறு ஆராதனையில் பிரசங்கம் செய்கிறார், அந்த ஆராதனைக்கு இரட்சிக்கப்படாத மக்களை அழைத்துவரும்படி கிறிஸ்தவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பொதுவாகக் கூறுவோமானால், கிறிஸ்தவர்களின் நண்பர்கள் வாரத்துக்கு ஒரு முறை சுவிசேஷத்துக்குச் செவிகொடுக்கிறார்கள். அந்த இரட்சிக்கப்படாத மக்கள் சபைக்கு வருவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களைச் சபைக்கு அழைத்துவர விரும்பும் கிறிஸ்தவ நண்பர்களால் அவர்கள் சபைக்கு அழைத்துவரப்பட வேண்டும். வேதாகமரீதியான மாதிரியில் அப்போஸ்தலர்களும் சுவிசேஷகர்களும் தொடர்ந்து பொது இடங்களிலும், தனிப்பட்ட இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவித்துவந்தார்கள். எல்லா விசுவாசிகளும் தங்கள் நண்பர்களோடும் அண்டைவீட்டாரோடும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து

[21] இதன் காரணமாகத்தான் இன்று பல சுவிசேஷகர்களும், உபதேசியார்களும், தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும்கூடச் சபைகளுக்குப் போதகர்களாக இருக்கிறார்கள். அமைப்புச்சார்ந்த சபையின் வடிவமைப்புக்குள்ளாகத் தேவனால் கொடுக்கப்பட்டுள்ள பல ஊழியங்களுக்குச் சரியான இடம் கொடுப்பதில்லை அல்லது அவைகளுக்கு முழுவதுமாக இடம் கொடுப்பதில்லை. எனவே மேய்ப்பரல்லாதர்கள் சபையின் போதகர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வேதாகமரீதியான வடிவமைப்பில் இத்தகையவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவருபவர்களாக இருப்பார்கள், ஆனால் இப்போது அது கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. எல்லோருமே தனது மெய்யான அழைப்பை மறந்து அமைப்புச் சார்ந்த சபையின் வடிவில் தனது சொந்த ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும்படி திரும்பிவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. போதகர்கள் ‘‘தங்கள் மக்களின் தசமபாகத்தைப்’’ பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறபடியாலும், இந்தப் பணத்தில் பெரும்பகுதி கட்டிடங்களைக் கட்டவும் அவைகளைப் பராமரிக்கவும் செலவழிக்கப்படுகிறபடியாலும், மேய்ப்பராக இருப்பதை விடுத்து மற்ற ஊழியங்களுக்காக அழைக்கப்பட்டவர்களும் தங்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியங்களுக்குப் பொருளாதார ஆதாரத்தைப் பெறும்படியாகச் சபைகளின் மேய்ப்பர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.





கொண்டார்கள். இந்த இரண்டு மாதிரிகளில் எந்த மாதிரியின் மூலமாக அதிகமான இரட்சிக்கப்படாதவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பார்கள்?

தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரியில் விசுவாசிகள் தங்கள் இரட்சிக்கப்படாத நண்பர்ளைக் கூச்சமில்லாமல் அழைத்துவருவதற்காக ஒரு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய கட்டிடம் தேவைப்படுகிறது. இரட்சிக்கப்படாத நண்பர்களும் அதில் நுழையக் கூச்சப்படக் கூடாது. இதற்கு அதிகமான பணம் தேவைப்படுகிறது. சுவிசேஷம் ‘‘பரவச்செய்யப்படுவதற்கு’’ முன்பாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு கட்டிடத்தை வாங்க வேண்டியிருக்கிறது அல்லது கட்ட வேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் இப்படிப்பட்ட கட்டிடம் ஒரு நல்ல இடத்தில், குறிப்பாகச் செல்வந்தர் வாழும் புறநகரில் இருக்க வேண்டும். ஆனால் வேதாகமரீதியான மாதிரிக்கோ எந்தக் கட்டமும் தேவைப்படுவதில்லை, இதனால் நல்ல இடத்துக்காகப் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு கட்டிடத்துக்குள் வருபவர்களுக்கு மட்டுமே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவில்லை.

## கூடுதலான வேறுபாடுகள்

தேடுபவர்களுக்கு உணர்வுள்ள சில சபைகளை வேதாகமரீதியான சபைகளோடு ஒப்பிடும்போது கூடுதலான வேறுபாடுகளைக் காண முடிகிறது.

நடபடிகளின் புத்தகத்தில் அப்போஸ்தலர்களும் சுவிசேஷர்களும் மக்களை மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, உடனடியாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி அழைத்தார்கள். மக்கள் மனமாற்றம் பெறும்போது, சீஷத்துவம் குறித்த இயேசுவின் நிபந்தனைகளை நிறைவேற்றிக் கிறிஸ்துவின் சீஷராகுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்டது; லூக்கா 14:26–33 மற்றும் யோவான் 8:31–32 வசனங்களில் இந்த நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இயேசுவின்மீது அதிகமான அன்புகாட்டி, அவருடைய வார்த்தையின்படி வாழ்ந்து, தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, உடைமைகளுக்கான உரிமையை விட்டுக்கொடுத்து, இப்போது தேவனுக்குச் சொந்தமானவைகளுக்குச் சிறந்த உக்கிராணக்காரர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் பெரும்பாலும் தேடுபவர்களுக்கு உணர்வுள்ள சபைகளில் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷம் வேறுபட்டதாக இருக்கிறது. தேவன் எவ்வளவாக அவர்களை நேசிக்கிறார் என்று பாவிகளிடம் சொல்லப்படுகிறது. அவர் எப்படி அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார் என்றும், அவர்கள் எப்படி ‘‘இயேசுவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதின்மூலம்’’ இரட்சிக்கப்பட முடியும் என்றும் அவர்களுக்குச் சொல்லப்படுகிறது. சீஷத்துவத்தின் கிரயத்தை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்படாமல், ஒரு சிறிய ‘‘இரட்சிப்புக்கான

ஜெபத்தை’’ ஏறெடுத்த பிறகு, அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிச்சயம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் இப்போது கிறிஸ்துவில் வளர்ச்சிபெறத் துவங்கும் ஒரு வகுப்பில் சேரும்படி அழைக்கப்படுகிறார்கள். அப்படி அவர்கள் வகுப்பில் சேர்ந்தாலும் [பெரும்பாலானவர்கள் மறுபடியுமாகச் சபைக்குத் திரும்பிவருவதில்லை] கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தல்ல, சபையின் குறிப்பிட்ட கோட்பாடுகளைக் குறித்தே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இறுதியாக விசுவாசி தனது வருமானத்தில் தசமபாகத்தைச் சபைக்குக் கொடுக்கத் துவங்கும்போது இந்தச் ‘‘சீஷத்துவ’’ செயல்திட்டத்தின் உச்சக்கட்டம் எட்டப்படுகிறது. [சபையின் கடன்களைச் செலுத்தவும், வேதாகமரீதியல்லாத அலுவலர் களுடைய சம்பளங்களைக் கொடுக்கவுமே இந்தப் பணம் செலவிடப் படுகிறது. இது எப்படிப்பட்ட பரிதாபமான உக்கிராணத்துவமாக இருக்கிறது! தேவன் ஆதரவளிக்க விரும்பும் பல காரியங்களுக்காகச் செலவிடப்பட வேண்டிய பணத்தைக் கொள்ளையடித்து, தேவனால் நிறுவப்படாத காரியங்களுக்காகச் செலவழிக்கிறார்கள்]. அமைப்புச் சார்ந்த சபைக்குள்ளாக அந்த விசுவாசி ஏதேனும் ஆதரவளிக்கும் பணியைச் செய்யும்போது [இப்படிப்பட்ட பணிகள் ஒருபோதும் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை] அவர் ‘‘தனக்குரிய ஊழியத்தைக் கண்டுகொண்ட தாக’’ நம்பும்படி செய்யப்படுகிறது.

உங்கள் நாட்டு அரசாங்கம் இராணுவத்தில் போதுமான நபர்கள் சேருவதில்லை என்பதை அறிந்து, ‘‘தேடுபவர்களைக்குறித்த உணர்வுள்ள தாக’’ மாறும்படி தீர்மானித்தால் என்ன நடக்கும்? இரானுவத்தில் சேர்ந்தால் அவர்கள் எதுவும் செய்ய வேண்டாம் – அவர்கள் சம்பாதிக்காத, அவர்களுக்குத் தகுதியில்லாத சம்பளம் மாதம்தோறும் கொடுக்கப்படும் என்று ஆசைகாட்டுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் காலையில் தாங்கள் விரும்பும் நேரத்தில் படுக்கையைவிட்டு எழலாம். அவர்கள் திறனளிக்கும் பயிற்சிகளை எடுத்துக்கொள்ளலாம், ஆனால் அவர்கள் விரும்பினால் இதற்குப் பதிலாகத் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு நேரத்தைக் கழிக்கலாம். யுத்தம் வந்தாலும், அவர்கள் யுத்தத்தில் சேருவதையோ அல்லது கடற்கரைக்குச் செல்லுவதையோ இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். இதன் பின்விளைவு எப்படிப் பட்டதாக இருக்கும்?

இராணுவத்தில் சேருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அது இப்போது உண்மையில் ஒரு இராணுவமாக, தனது பணியைச் செய்யக் கூடியதாக இருக்காது. தேடுபவர்களுக்கு உணர்வுள்ள சபைகளில் இதுதான் நடக்கிறது. தகுதி நிலைகளைக் குறைக்கும்போது ஞாயிற்றுக்கிழமை வருகை தருபவர் களின் எண்ணிக்கை அதிகமாகிறது. ஆனால் சீஷத்துவத்தையும் கீழ்ப்படி





தலையும் அது அழித்துப் போடுகிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் ‘‘சுவிசேஷத்தைப் பிரசங்கித்து’’ வாரநாள் ஆராதனைகளில் ‘‘சீஷராக்கும் ஊழியத்தைச்’’ செய்யும் தேடுபவர்களுக்கு உணர்வுள்ள சபைகள் வாரநாள் ஆராதனைக்கு வரும் மக்களிடம் சீஷர்கள் மட்டுமே பரலோகத்துக்குச் செல்ல முடியும் என்று சொல்லுவார்களானால், அது பெரிய பிரச்சினையை உண்டாக்கிவிடும். அப்போது மக்கள் ஞாயிற்றுக்கிழமை காலைகளில் தங்களிடம் பொய் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட சபைகள் வாரநாள் ஆராதனைகளுக்கு வருபவர்களையும் ஏமாற்ற வேண்டியிருக்கிறது. பரலோகத்தை நோக்கிச் செல்லும் மக்கள் சீஷத்துவத்தையும் கீழ்ப்படிதலையும் கைக்கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாகப் போதிக்காமல், விரும்பினால் அவர்கள் இவைகளைத் தெரிந்துகொள்ளலாம் என்று போதிக்கிறார்கள். [22]

சில அமைப்புச் சார்ந்த சபைகள் வேதாகம மாதிரியின் சில அம்சங்க ளைச் சேர்த்துக்கொள்ளுகின்றன என்பதை நான் அறிவேன். என்றாலும் வேதாகம மாதிரியே சீஷர்களையும், சீஷராக்குபவர்களையும் பெருக்க மடையச் செய்வதில் ஆற்றலுடையதாக இருக்கிறது.

ஏன் இன்று வேதாகம மாதிரி பின்பற்றப்படவில்லை? பல்வேறு சாக்குப்போக்குகள் சொல்லப்பட்டன. ஆனால் இறுதியாக ஆராய்ந்து பார்க்கும்போது, பாரம்பரியம், அவநம்பிக்கை, கீழ்ப்படியாமை இவை களின் காரணமாகவே வேதாகமரீதியான மாதிரி பின்பற்றப்படவில்லை என்பது தெரிகிறது. இன்றைய நமது உலகத்தில் வேதாகம மாதிரியைப் பின்பற்ற முடியாது என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால் இன்றும் உலகில் பல இடங்களில் வேதாகம மாதிரி பின்பற்றப்படுகிறது என்பது தான் உண்மையாகும். எடுத்துக்காட்டாக, விசுவாசிகள் வேதாகம மாதிரியைப் பின்பற்றியதினால் மட்டுமே கடந்த ஐம்பது ஆண்டுகளில் சீனாவில் சபை மிகவும் துரிதமாக வளர்ந்திருக்கிறது. மற்ற இடங்களைவிடத் தேவன் சீனாவில் வித்தியாசமானவராக இருக்கிறாரா?

சபை வளர்ச்சி குறித்த அமெரிக்க வழிமுறைகளைக் குறித்து அமெரிக்கரல்லாத போதகர்கள் எச்சரிப்போடு இருக்க வேண்டும் என்பதற்காகவே இவையெல்லாம் சொல்லப்படுகிறது. இந்த அமெரிக்க

[22] லூக்கா 14:26–33 வசனங்களில் தமக்கு மெய்யான சீஷர்களாக இருப்பவர் களின் தகுதிகளை இயேசுவானவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இவைகளை ஏற்கெனவே விசுவாசிகளாக இருப்பவர்கள் தங்கள் ஆவிக்குரிய பயணத்தில் விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம் என்று இரண்டாவது அடியாக அவர் எடுத்துச் சொல்லவில்லை. மாறாக, அவர் திரளான ஜனங்களிடமே இவைகளைக் கூறினார். அவருடைய சீஷராக மாறும் ஒரே அடியையே, இரட்சிப்பின் அடியையே அவர் வலியுறுத்தினார். இது பெரும்பாலான தேடுபவர்களுக்கு உணர்வுள்ள சபைகளில் போதிக்கப்படுவதற்கு முரண்பாடானதாக இருக்கிறது.

வழிமுறைகளே உலகெங்கும் போதிக்கப்படுகின்றன. சபை வளர்ச்சி குறித்த வேதாகம மாதிரியை அவர்கள் பின்பற்றுவார்களானால், சீஷர்களை உருவாக்க வேண்டும் என்ற இயேசுவின் இலக்கை எட்டுவதில் அவர்கள் அதிக வெற்றிகரமாகச் செயல்பட முடியும்.

**பின்விளைவு**

நவீன சபை வளர்ச்சி குறித்த போதனையின் பல அம்சங்கள் உலகெங்கிலுமுள்ள சராசரியான போதகர்களுக்கு ஏற்றவையாக இருக்க வில்லை என்பதை நான் கவனித்திருக்கிறேன். பெரும்பாலான போதகர்கள் நூறு பேருக்கும் குறைவான மந்தையையே பராமரித்து வருகிறார்கள். சபை வளர்ச்சி குறித்த பல யுக்திகளை அவர்கள் முயற்சி செய்து பார்த்து அவை செயல்படவில்லை என்பதைக் கண்டு மனச் சோர்வடைந்திருக்கிறார்கள், இதற்கு அவர்கள் காரணமல்ல. ஒரு போதகரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டுப் பல காரியங்கள் ஒரு சபையின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன என்று எவரும் ஒப்புக்கொள்ளு வதில்லை. அவைகளைக் குறித்து இப்போது பார்ப்போம்.

முதலாவதாக, *உள்ளூர் மக்கள்தொகைக்கு ஏற்பச் சபை வளர்ச்சி யானது கட்டுப்படுத்தப்படுகிறது*. அமைப்புச் சார்ந்த பல பெரிய சபைகள் பெரிய நகரங்களிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் தொகையிலிருந்து அவர்கள் தங்கள் சபைக்கு உறுப்பினர்களைப் பெறலாம். எனவே எண்ணிக்கைதான் வெற்றிக்கான சரியான அளவு கோலாக இருக்குமானால், சபையானது அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு அல்ல, அவர்கள் உள்ளூர் மக்கள் தொகையில் எத்தனை *சதவீதமாக* இருக்கிறார்கள் என்பதைக் கொண்டு அளக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது, பத்துப் பேரைக் கொண்ட சில சபைகள் பத்தாயிரம் பேரைக் கொண்ட மற்றச் சபைகளைவிட அதிக வெற்றிகரமாகச் செயல்படுகின்றன. ஐம்பது பேர் களைக் கொண்ட ஒரு கிராமத்திலுள்ள சபையில் பத்துப் பேர் இருப்பார் களானால், அது ஐம்பது இலட்சம் பேரைக்கொண்ட ஒரு நகரத்தில் பத்தாயிரம் பேரைக்கொண்ட ஒரு சபையைவிட வெற்றிகரமானது என்றே சொல்ல வேண்டும். (என்றாலும், இந்தப் பத்துப்பேரைக் கொண்ட சபையின் போதகர்கள் சபை வளர்ச்சிக் கருத்தரங்குகளில் பேசும்படி ஒருபோதும் அழைக்கப்பட மாட்டார்கள்).

**சபை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் இரண்டாவது காரணி**

இரண்டாவதாக, *ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திலுள்ள எல்லாச் சபைகளினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்களின் அளவினால் சபை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது*. எந்தவொரு குறிப்பிட்ட வேளையிலும் ஒரு பகுதியில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களே சுவிசேஷத் துக்குத் தங்கள் இருதயத்தைத் திறந்து கொடுக்கிறவர்களாக இருக்





கிறார்கள். இப்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய எல்லோரும் எட்டப்படும்போது, அதற்கு மேல் எந்தச் சபையும் வளர்ச்சிபெற முடியாது. ஏற்கெனவே ஒரு சபையில் இருப்பவர்கள் மற்றொரு சபைக்கு மாறினாலொழிய சபைகளில் எண்ணிக்கை அதிகரிக்காது. (இப்படித்தான் மற்றச் சபைகளில் இழப்பை ஏற்படுத்திப் பல பெரிய சபைகள் வளர்ந்திருக்கின்றன).

இப்போது கிறிஸ்தவர்களாக இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு காலத்தில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருந்தவர்களே என்பது உண்மைதான். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலின் பேரில் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக ஆனார்கள். எனவே இப்போது ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பவர்களும்கூட ஏற்றுக் கொள்ளுபவர்களாக மாற முடியும். அப்படி அவர்கள் மாறும்போது, சபைகள் வளர்ச்சி பெறுகின்றன. ஏற்றுக்கொள்ளாத *பல* மக்கள் திடீரென்று ஏற்றுக்கொள்ளும்போது நாம் குறிப்பிடும் ''எழுப்புதல்'' ஏற்படுகிறது. ஆனால் *ஒரு* நபர் ஏற்றுக்கொள்ளுபவராக மாறினாலே அதுவும் எழுப்புதல் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இது சிறிய அளவிலான எழுப்புதலாகும். ஒரு நபர் ஏற்றுக்கொள்ளுபவராக மாறியதின் மூலமாகவே பல பெரிய எழுப்புதல்கள் துவங்கியிருக்கின்றன. எனவே போதகர்களே சிறிய துவக்கங்களை வெறுக்காதீர்கள்.

இயேசுவானவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தமது சீஷர்களைப் பட்டணங்களுக்கு அனுப்பினார். அந்தப் பட்டணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாதவை, ஒரு நபர் கூட மனந்திரும்ப மாட்டார் என்பதை இயேசு அறிந்திருந்தார் (பார்க்க, லூக்கா 9:5). என்றாலும், அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அவர் அவர்களை அனுப்பினார். அந்தச் சீஷர்கள் வெற்றியைப் பெறவில்லையா? இல்லை, மனமாற்றம் பெற்றவர்கள் எவரும் இல்லாவிட்டாலும் (சபை வளர்ச்சியும் இல்லை), அவர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தபடியால் வெற்றிகரமானவர்களாகவே இருக்கிறார்கள்.

இதைப்போலவே, இயேசுவானவர் இன்றும் போதகர்களைக் கிராமங் களுக்கும், பட்டணங்களுக்கும், புறநகரங்களுக்கும் அனுப்புகிறார். அங்கே மிகக் குறைந்த சதவீதத்தினரே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். தங்கள் சிறிய சபைகளுக்கு உண்மையாக ஊழியம்செய்யும் இந்தப் போதகர்கள் சபை வளர்ச்சி வல்லுநர்களின் பார்வையில் தோல்வியடைந்தவர்களாகக் காணப்பட்டாலும் தேவனுடைய பார்வையில் ஜெயம்கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய அளவில்லாத கிருபையின் காரணமாகவும், தமது மக்களின் பரிந்துரை ஜெபங்களின் காரணமாகவும், ஏற்றுக்கொள்ளாத மக்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறார் என்ற உண்மை ஒவ்வொரு பகுதியிலுமுள்ள போதர்களுக்கு ஊக்கமளிக்க

வேண்டும். மனச்சாட்சி, தமது சிருஷ்டி, சூழ்நிலைகள், தமது உலக நியாயத்தீர்ப்பு, தமது சபையின் ஜீவனுள்ள சாட்சி, சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுதல், பரிசுத்த ஆவியானவரால் குற்றம் உணர்த்தப்படுதல் இவைகளின் மூலமாகத் தேவன் இரட்சிக்கப்படாத மக்களில் கிரியைசெய்து வருகிறார். எனவே, போதகரே, மனம்தளர்ந்து போகாதிருங்கள். தொடர்ந்து ஜெபித்து, கீழ்ப்படிந்து, பிரசங்கம் செய்துகொண்டிருங்கள். பெரிய அளவிலான ஒவ்வொரு எழுப்புதலுக்கு முன்பும் எழுப்புதலுக்கான தேவை காணப்படுகிறது. எப்போதுமே யாராவது ஒருவர் எழுப்புதலைக் குறித்துக் *கனவுகண்டு*கொண்டிருக்கிறார். தொடர்ந்து கனவு காணுங்கள்!

### சபை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மூன்றாவது காரணி

போதகரின் திறமையே சபை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மூன்றாவது காரணியாக இருக்கிறது. பெரும்பாலான போதகர்கள் ஒரு பெரிய சபையைக் கண்காணிப்பதற்கான திறமையைப் பெற்றிருக்க வில்லை, இதற்காக அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. அமைப்பு ரீதியாகவோ, நிர்வாகரீதியாகவோ அல்லது ஒரு பெரிய சபைக்குத் தேவையான பிரசங்கிக்கும்/போதிக்கும் திறமைகளைப் பெற்றிருப்பதிலோ அவர்கள் வரம்பெற்றிருக்கவில்லை. பெரிய சபைகளுக்கு ஊழியம் செய்யும்படி தேவன் அவர்களை அழைத்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு சராசரியான அளவைக் கொண்டிருக்கும் அமைப்புச் சார்ந்த சபைக்காகவோ அல்லது வீட்டுச் சபைக்காகவோ ஊழியம் செய்வதற்கு அப்பாற்பட்டு அதிகமாகச் செய்ய அவர்கள் முயலக் கூடாது.

அமெரிக்காவின் மிகப் பெரிய சபைகள் ஒன்றின் தலைமைப் போதகர் தலைமைத்துவத்தைக் குறித்து எழுதிய ஒரு நூலை நான் சமீபத்தில் வாசித்தேன். அவர் பல இக்காலத்துப் போதகர்களுக்குத் தனது அனுபவங் களின் அடிப்படையில் கொடுத்திருந்த ஆலோசனைகளை நான் வாசித்த போது இப்படிப்பட்டஎண்ணம் எனக்கு ஏற்பட்டது – ‘‘இவர் ஒரு போதகராக இருப்பது எப்படி என்று நமக்குச் சொல்லவில்லை – ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் தலைமைச் செயல் நிர்வாக அதிகாரியாக இருப்பது எப்படி என்றே சொல்லிக்கொண்டிருக்கிறார்.’’ இப்படிப்பட்ட மிகப் பெரிய அமெரிக்க அமைப்புச் சார்ந்த சபையின் தலைமைப் போதகரால் வேறு எதையும் தெரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால் அவருக்கு அதிகமான உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள், இந்த உதவியாளர்களை நிர்வகிப்பது ஒரு முழுநேர வேலையாகும். நான் வாசித்த புத்தகத்தின் ஆசிரியர் ஒரு சபைசாராத பெரிய நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக வெற்றிகரமாகச் செயல்படும் திறமையைக் கொண்டிருந்தார் [உண்மையில், அவர் தனது புத்தகத்தில் அடிக்கடி பெரிய தொழில் நிர்வாக ஆலோசகர்களின் கருத்துக்களைத் தனது நூலை வாசிக்கும் போதகர்களுக்காகத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்]. ஆனால்





அவருடைய நூலை வாசிப்பவர்களில் பலர் அவர் பெற்றிருக்கும் தலைமைத்துவ மற்றும் நிர்வாகத் திறமைகளைப் பெற்றிருக்கவில்லை.

இதே புத்தகத்தில், நூலாசிரியர் தான் தனது பெரிய சபையைக் கட்டியெழுப்பும்போது, பல முறை அநேகமாக அழிவுக்குள்ளாக்கும் தவறுகளைச் செய்திருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பிழைகளின் காரணமாக அவர் தனது குடும்ப உறவையோ அல்லது ஊழியத்தில் தன் எதிர்காலத்தையோ இழந்துபோயிருக்கலாம். ஆனால் தேவ கிருபை யினால் அவர் பிழைத்துக்கொண்டார். என்றாலும் இவருடைய அனுபவங்கள் மற்ற சில அமைப்புச் சார்ந்த சபையின் போதகர்களின் நிலைமையை எனக்கு நினைவுபடுத்தியது. இதே போன்ற வெற்றிக்காக அவர்கள் மும்முரமாக உழைத்தபோது, இதைப் போன்ற பிழைகளைச் செய்து முழுமையாக அழிந்து போயிருக்கிறார்கள். சிலர் தங்கள் சபைகளுக்காகக் கடுமையாக உழைத்தபடியால், தங்கள் பிள்ளைகளை இழந்துபோனார்கள் அல்லது குடும்ப உறவுகளை அழித்துப்போட்டு விட்டார்கள். சிலர் நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டார்கள் அல்லது முழுவதுமாகப் பலத்தை இழந்துபோனார்கள். மற்றவர்கள் முற்றிலுமாகக் குழப்பமடைந்து ஊழியத்தையே முழுவதுமாக விட்டுவிட்டார்கள். பலர் பிழைத்துக்கொண்டாலும் அவர்களைக் குறித்துச் சிறப்பாகச் சொல்லு வதற்கு எதுவுமில்லை. அவர்கள் தாங்கள் இவ்வளவுதூரம் கடுமையாக முயற்சி செய்ததினால் என்ன பயன் என்ற கலக்கத்தில் தொடர்ந்து மனம்தளர்ந்து போனவர்களாக வாழ்ந்துவருகிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட புத்தகத்தை நான் வாசித்தபோது, துவக்ககாலச் சபையின் ஞானத்தைக் குறித்தே நான் மறுபடியும் மறுபடியுமாக என் உள்ளத்தில் உணர்த்தப்பட்டேன். அப்போது நவீன அமைப்புச் சார்ந்த சபைக்கு இணையான எதுவும் கிடையாது. எந்தவொரு போதகரும் இருபத்தைந்து பேருக்கு அதிகமான மந்தையைப் பராமரிக்க வேண்டி யிருக்கவில்லை. முந்தைய அத்தியாயம் ஒன்றில் நான் கூறியபடி, தங்கள் சபைகள் மிகச் சிறியதாக இருக்கின்றன என்று நினைக்கும் போதகர்கள் தங்கள் ஊழியங்களை வேதவசனங்களின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் ஐம்பது பேரைக் கொண்டிருந்தாலும்கூட அது அளவுக்கு மீறிய பெரிய சபையாகவே இருக்கும். அவர்களுக்குள் தலைமைதாங்கி நடத்தக் கூடியவர்கள் இருப்பார்களானால் அவர்கள் சபையை மூன்றாகப் பிரித்துவிட்டு, சபைக் கட்டிடத்தை விற்றுவிட்டு, தேவனுடைய வழியில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பவும், சீஷராக்கும் இலக்கை எட்டவும் ஜெபத்தோடு முயல வேண்டும்.

இது அதிகப் புரட்சிகரமானதாகத் தோன்றுமானால், குறைந்த பட்சமாக அவர்கள் வருங்காலத் தலைவர்களைச் சீஷராக்குவதைத் துவங்க வேண்டும், அல்லது சிறுகுழுக்களைத் துவங்க வேண்டும். ஏற்கெனவே சிறுகுழுக்கள் இருக்குமானால், அவைகளை வீட்டுச்

சபைகளாக இயங்குமாறு விடுவித்து, என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

### மற்ற நவீன சபை வளர்ச்சி யுக்திகள்

தற்போது சபை வளர்ச்சிக்காக தேடுபவர்களுக்கு உணர்வுள்ள மாதிரியைப் போல வேறு சில யுக்திகளும் சொல்லப்படுகின்றன. இந்த யுக்திகளில் பெரும்பாலானவை வேதாகமரீதியானவைஅல்ல. இவை ‘‘ஆவிக்குரிய போராட்டத்தின்’’ கீழாக வருகின்றன. இவைகளுக்கு ‘‘அரண்களைத் தகர்த்தல்’’, ‘‘யுத்த ஜெபம்’’, ‘‘ஆவிக்குரிய வரைபடம் தயாரித்தல்’’ என்றெல்லாம் தலைப்பிடப்பட்டு விளம்பரம் செய்யப்படுகின்றன.

ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த மற்றொரு அத்தியாயத்தில் இவைகளைக் குறித்து நாம் பார்ப்போம். சுருக்கமாகக் கூறுவோமானால், அப்போஸ்தலர்களுக்கு அறிமுகமில்லாத இத்தகைய செயல்பாடுகள் ஏன் இன்று சபை வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகக் கருதப்படுகின்றன என்று நாம் வியப்படைகிறோம்.

சபை வளர்ச்சி குறித்த இந்த யுக்திகளில் பல ஒரு சில போதகர் களின் அனுபவங்களின் விளைவாக உருவாக்கப்பட்டவையாகும். ‘‘நான் இதைச் செய்தேன், அதைச் செய்தேன். என் சபை வளர்ச்சி பெற்றது. எனவே இதே காரியங்களை நீங்களும் செய்வீர்களானால், உங்கள் சபையும் வளர்ச்சிபெறும்’’ என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய சபைகளின் வளர்ச்சிக்கும், அவர்கள் செய்த விநோதமான காரியங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதே உண்மையாகும். இந்த விநோதமான போதனைகளை மற்றப் போதகர்கள் பின்பற்றும்போது இது நிரூபணமாகியிருக்கிறது. அவர்கள் இதே காரியங்களைச் செய்தாலும் அவர்களுடைய சபையில் வளர்ச்சி ஏற்படவில்லை.

‘‘எங்கள் பட்டணத்திலுள்ள பிசாசுகளுக்கு எதிராக நாங்கள் குரல் எழுப்பியபோது எங்கள் சபையில் எழுப்புதல் ஏற்பட்டது. எனவே உங்கள் சபையில் எழுப்புதல் ஏற்பட வேண்டுமானால், நீங்கள் பிசாசுகளுக்கு எதிராகக் கதற வேண்டும்’’ என்று ஒரு சபை வளர்ச்சிப் போதகர் கூறலாம்.

ஆனால் பட்டணங்களைச் சுற்றிவந்து, பிசாசுகளுக்கு எதிராக எவரும் குரலெழுப்பாத வேளைகளிலும் எப்படிக் கடந்த இரண்டாயிரம் ஆண்டு சபை வரலாற்றில் அதிகமானதும், அற்புதமானதுமான எழுப்புதல்கள் ஏற்பட்டிருக்கின்றன? பிசாசுகளை எதிர்த்துக் கத்தியதினா லேயே எழுப்புதல் ஏற்பட்டது என்று அந்தப் போதகர் *நினைத்தாலும்*, அது தவறு என்பதையே இது காட்டுகிறது. சபைகளின் ஐக்கிய *ஜெபங்களின்* விளைவாக அந்தப் பட்டணத்திலுள்ளவர்கள் அதிகமான அளவில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக மாறியிருக்க





லாம். மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக மாறிய வேளையில் போதகர் அவர்களுக்குப் பிரசங்கித்திருக்கிறார் என்பதே சரியான காரணமாக இருக்கும். பெரும்பாலான வேளைகளில் *சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருப்பதின்* விளைவாகவே சபை வளர்ச்சி ஏற்படுகிறது. [சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்கிறார்].

பட்டணத்துக்கு மேலாகப் பிசாசுகளை எதிர்த்துக் கத்துவது ஒரு குறிப்பிட்ட போதகரின் சபைக்கு எழுப்புதலைக் கொண்டுவந்திருக்கு மானால், பிறகு ஏன் காலம் கடக்கும்போது, அந்த எழுப்புதல் மந்தமாகி பிறகு முடிவுக்கு வந்துவிடுகிறது? பிசாசுகளை நோக்கிக் கத்துவதே முக்கியமான காரியமாக இருப்பதால், நாம் தொடர்ந்து பிசாசுகளை நோக்கிக் கத்திக்கொண்டிருப்போமானால், பட்டணத்திலுள்ள *எல்லோரும்* கிறிஸ்துவுக்குள் வரவேண்டுமே? ஆனால் அப்படி நடப்பதில்லை.

நாம் இதைக் குறித்துச் சிந்திப்போமானால் உண்மை தெளிவாகத் தெரிகிறது. ஜெபித்தல், பிரசங்கித்தல், போதித்தல், சீஷராக்குதல், பரிசுத்த ஆவியானவரின் உதவி போன்றவைகளே சபை வளர்ச்சிக்கான வேதாகமரீதியான வழிவகைகளாக இருக்கின்றன. இந்த வேதாகம அடிப்படையிலான வழிவகைகளும்கூடச் சபை வளர்ச்சிக்கான உத்திரவாதங்கள் அல்ல, ஏனென்றால் மக்கள் தாங்களாகவே தெரிந்து கொள்ளும் சுயாதீனத்தைத் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவர்களால் மனந்திரும்புதலைத் தெரிந்துகொள்ள முடியும், அல்லது தெரிந்துகொள்ளாமலும் இருக்க முடியும். இயேசுவானவர் சில பட்டணங்களுக்குச் சென்ற வேளையில் அங்கே அவரால் சபை வளர்ச்சியைக் காண முடியவில்லை, ஏனென்றால் அங்கேயிருந்த மக்கள் மனந்திரும்பவில்லை.

சபையைக் கட்டியெழுப்ப நாம் *வேதாகமரீதியான* வழிவகைகளைப் பின்பற்றினால் மட்டும் போதுமானது என்பதைக் காட்டவே இவை யெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர்த்து மற்றவை எல்லாம் நேரத்தை வீணாக்குபவையாகும். இவை மரம், புல், வைக்கோல் இவைகளைக் கொண்டு கட்டப்படுபவையாகும். அக்கினி யினால் சோதிக்கப்படும்போது இவை அழிந்துபோகும், பரிசு கிடைக்காது [பார்க்க, 1 கொரி. 3:12–15].

இறுதியாக, எண்ணிக்கையை அதிகரிப்பது அல்ல, சீஷர்களை உருவாக்குவதே இலக்காக இருக்க வேண்டும். நாம் சீஷராக்கும்போது சபை வளருமானால், தேவனைத் துதியுங்கள்!